தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண் 2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்),எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.243447590

**ஆணை நாள் 04.11.2020**

**முன்னிலை**

**திரு ரா. ராஜகோபால், இ.ஆ.ப., (ஓ)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA4603/SCIC/2020**

திரு S. விஜயன் (எ) விஜயகுமார் . .. மேல்முறையீட்டாளர்

/எதிர்

பொதுத் தகவல் அலுவலர்
கண்காணிப்பாளர் ' யு ' பிரிவு,
பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்,
சென்னை - 28. பொது அதிகார அமைப்பு

## ஆணை

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் 28.02.2020 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய மனுவில், தனது 28.01.2020 தேதியிட்டு பதிவுத்துறை தலைவர் அவர்களுக்கு அனுப்பிய மனுவின் மீது எடுத்த நடவடிக்கைகள் குறித்து தகவல்களை கேட்டுள்ளார். அதன்பின்னர் பதில் ஏதும் கிடைக்கப்பெறததால் மனுதாரர் 09.06.2020 தேதியிட்டு பிரிவு 19(3)-ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார்.

2. மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனுவின்மீது இவ்வாணையத்தால், 04.09.2020 அன்று பிறப்பிக்கப்பட்ட ஆணையில், மனுதாரர் கோரும் தகவல்களை முழுமையாக வழங்குவதற்கு கடைசி வாய்ப்பு வழங்கும் வண்ணம் 15.09.2020-க்குள் வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டிருந்தது. மனுதாரருக்கு எவ்வித தகவல்களும் வழங்கப்படவில்லை என்றாலோ, முழுமையற்ற தகவல்கள் வழங்கப்பட்டிருந்தாலோ அல்லது தவறான, குறைபாடான தகவல்கள்

வழங்கப்பட்டிருந்தாலோ, மனுதாரர் 21.09.2020-க்குள் ஆணையத்திற்கு கடிதம் மூலம் தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

3. மேலே குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் ஆணையின்பால் மனுதாரரின் கவனம் ஈர்க்கப்படுகிறது. அந்த ஆணையில் மேற்கூறப்பட்ட வழக்கில் பொதுத் தகவல் அலுவலர் தகவல்களை வழங்க பணிக்கப்பட்டிருந்தார். அத்தகவல்களை பொதுத் தகவல் அலுவலர் கடித எண்.24619/F3/U2/2020, நாள்.23/09/2020 என்ற கடிதத்தின் வாயிலாக வழங்கியதாக பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்துள்ளார். (இணைப்பு). அதன்பின்னர், பல நாட்களாகியும் வரப்பெற்ற தகவல்கள் சம்மந்தமாக மனுதாரரிடமிருந்து எந்தவொரு ஆட்சேபணையும் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் 03.11.2020 வரை பெறப்படாத காரணத்தால், மனுதாரரின் வழக்கு முற்றாக்கி ஆணையிடப்படுகிறது.

ஒம்/-(ரா. ராஜகோபால்)
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA4603/SCIC/2020</u>**

<u>பெறுநர்</u>

<u>பொது அதிகார அமைப்பு</u>

பொதுத் தகவல் அலுவலர்
கண்காணிப்பாளர் ' யு ' பிரிவு,
பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்,
சென்னை - 28.

<u>மனுதாரர்</u>

திரு. S. விஜயன் (எ) விஜயகுமார்,
c/o. ரேவதி தாமோதரன்,
71(35), வெங்கடேஷ் பவன்,
ஆர்மீனியன் தெரு, சென்னை - 1.

TG_PC 04112020

169

SA 4603/2020

//பதிவுத்துறை//

TAMILNADU INFORMATION COMMISSION
032826
06 OCT 2020
CHENNAI 600 018

அனுப்புநர்
பொதுத் தகவல் அலுவலர் மற்றும்
கண்காணிப்பாளர் "யு"பிரிவு,
பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்,
சென்னை 28.

பெறுநர்
தகவல் ஆணையர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை.
(இணைப்புடன்)

கடித எண்.24619/F3/U2/2020 நாள்: 23.09.2020

அய்யா/அம்மையீர்,

**பொருள்:** தமிழ்நாடு தகவல் ஆணையம் ஆணை வரப்பெற்றது தொடர்பாக.

**பார்வை:** 1.தமிழ்நாடு தகவல் ஆணையர் வழக்கு ஆணை எண். SA 4603/மா.த.த.ஆ/2020 நாள்.04.09.2020.

*****

பார்வையில் காணும் தகவல் ஆணையத்திடம் இருந்து பெறப்பட்ட ஆணையில் கண்ட படி மனுதாரருக்கு உரிய பதிலளிக்கப்பட்டது. அதன் நகல் ஆணையத்தின் பார்வைக்கு இணைத்து அனுப்புகிறேன் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

23/9/2020
பொதுத் தகவல் அலுவலர் மற்றும்
கண்காணிப்பாளர் "யு"பிரிவு

23/9/2020

பதிவஞ்சலில்/ஒப்புகையுடன்

//பதிவுத்துறை//

அனுப்புநர்
பொதுத் தகவல் அலுவலர் மற்றும்
கண்காணிப்பாளர் "யு" பிரிவு,
பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்,
சென்னை-28.

பெறுநர்
திரு.எஸ்.விஜயன் (எ) விஜயக்குமார், B.E, MIE,
C/o.ரேவதி தமோதரன்,
71(35), வெங்கடேஷ் பவன்,
ஆர்மீனியன் தெரு,
சென்னை -1.
[இணைப்புடன்]

கடித எண்.24619/F3/U2/2020 நாள்:23.09.2020

அய்யா/அம்மையீர்,

பொருள்: தமிழ்நாடு தகவல் ஆணையம் ஆணை வரப்பெற்றது தொடர்பாக.

பார்வை:
1. தமிழ்நாடு தகவல் ஆணையர் வழக்கு ஆணை எண். SA 4603/மா.த.த.ஆ/2020 நாள்.04.09.2020.
2. தங்களின் புகார் மனு நாள்.28.01.2020.
3. தங்களின் தகவல் அறியும் உரிமைச்சட்டம் மனு நாள்.28.02.2020 மற்றும் 09.06.2020.

*****

பார்வையில் காணும் தகவல் ஆணையத்திடமிருந்து இணைத்து பெறப்பட்ட தங்கள் மனுவில் கண்ட இனம் தொடர்பாக கீழ்கண்டவாறு பதிலளிக்கப்படுகிறது.

பார்வை (2)ல் காணும் தங்களின் 28.01.2020 நாளிட்ட நில அபகரிப்பு புகார் மனு மீது பதிவுத்துறைத்தலைவர் சுற்றறிக்கை எண்.41530/யு1/2017 நாள்.08.11.2017-ன் படி இந்திய பதிவுச்சட்டப்பிரிவு 68(2)ன்கீழ் விசாரணை மேற்கொண்டு தங்களுக்கு பதிலினை வழங்குமாறு இவ்வலுவலக கடித எண்.3858/யு2/2020 நாள்.13.02.2020 வழி திருவண்ணாமலை மாவட்டப்பதிவாளரிடம் கோரப்பட்டு தங்களுக்கும் முகவரிக்கப்பட்டுள்ளது. மேற்படி கடித நகல் மீள தங்களுக்கு இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

மேலும் தாங்கள் அளித்த 28.01.2020 நாளிட்ட மனுவின் மீது மேற்கொண்ட நடவடிக்கை விவரத்தை பார்வை (3)ல் காணும் தகவல் அறியும் உரிமைச்சட்ட மனுவில் கோரப்பட்டது. மேற்படி மனுவிற்கு இவ்வலுவலக கடித எண்.8944/யு2/2020

நாள்.02.06.2020 மற்றும் 16187/யு2/2020 நாள்.27.07.2020 வழி தங்களுக்கு பதில் அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி கடித நகல்கள் மீள தங்களுக்கு இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

தற்போது 28.01.2020 நாளிட்ட தங்களின் புகார் மனு மீது தங்களிடம் விசாரணை மேற்கொள்ள 09.10.2020 அன்று முற்பகல் 11.00 மணிக்கு திருவண்ணாமலை மாவட்டப்பதிவாளர் அலுவலகத்தில் ஆஜராகும்படி கடித எண்.1511/ஆ1/2020 நாள்.21.09.2020 வழி தங்களுக்கு அறிவிப்பு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி கடித நகல் மீள தங்களுக்கு இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. விசாரணை முடிவுற்றதும் மாவட்டப்பதிவாளரல் உரிய ஆணை பிறப்பிக்கப்படும் என்ற விபரம் தகவலாக அளிக்கப்படுகிறது.

23/9/2020

பொதுத் தகவல் அலுவலா் மற்றும்
கண்காணிப்பாளர் "யு" பிரிவு

23/9/2020

நகல்
தகவல் ஆணையர், (வழக்கு எண்.SA7181/SCIC/2018 தொடர்பாக)
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
எண்.2, தியாகராயர் சாலை (ஆலயம்மன் கோவில் அருகில்),
எல்டாம்ஸ் ரோடு, தேனாம்பேட்டை,
சென்னை – 600 018.